**கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2018**

---

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என தற்போது அறியப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்-பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் சிறந்த சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் என்பவற்றிற்காக முறையான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றுதல் அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நல்ல நிலையை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,982 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 17,278 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 14,087 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 4,060 மில்லியனிற்கு சமமான ஜப'பான் ஜென் 3,191 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம்

ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 6,593.66 மில்லியன் தொகையான நடைபெறும் வேலைகள் அத்திகதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த பெறுமதி ரூபா 9,114.40 மில்லியன் தொகையான நடைபெறும் வேலைகளுடனட உடன்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நலிவாகவுள்ளது | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் பேணப்பட்ட பதிவேடுகளுடன் வித்தியானங்களை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலரீதியாக மீதிகளை இணக்கம் செய்யப்பட வேண்டும். |

2.2 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- | --- |
| (அ) | எஸ்எல்பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியல் | ஒப்பற்தங்களின் வடிவமைப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்ட பிரதான இறைக்கும் இல்லங்கள், சுத்திகரிக்கப்பட்ட நீர் வெளியேற்றும் முறைமை சேறு உலர்த்தல் படுக்கை போற்றவற்றின் நிர்மாணம் என்பவற்றின் ஒப்பந்தங்களின் கீழ் ரூபா 3.70 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 2.58 மில்லியன் கூட்டுத்தாகையான விடுதிக் கட்டணங்கள், உணவுச் செலவினம் பொன்ற உள்நாட்டு செலவினங்கள் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டம் பொருத்தமற்ற செலவினை மீளளிப்பு செய்தல் | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை | அத்தகைய நிலைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) 2016 மார்ச் 24 ஆந் திகதிய முகாமைத்துவ வெவைகள் திணைக்கள சுற்றறிக்கை | செயற்திட்டமானது முகாமைத்துவ செவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட பதவியணி கதவிகளில் உள்ளடக்கப் பட்டிருக்காத செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக ஒருவரை சேர்த்திருந்தது. உரிய உத்தியோகத்தர் செயற்திட்ட நடவடிக்கைகளுடன் ஈடுபட்டிருக்காததுடன் வருகைப் பதிவேடுகளையும் பேணியிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டமானது 2016 ஏப்ரல் மாதத்திலிருந்து ரூபா 1.79 மில்லியன் வேதனங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட மோட்டார் வாகனங்களில் ரூபா 2.53 மில்லியனும் செலவழித்திருந்தது. | பயனற்ற செலவினம் | செயற்திட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் 2015 ஏப்ரல் 06 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். | பொறுப்புடைய தரப்பினர்களை இனங்காப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 04 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அவற்றின் பௌதீக முன்னெற்றத்தின் மீது பின்வரும் அவதானிப்புகள் கீழே தரபட்டுள்ளன.

| கூறு | நடவடிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னெற்றம் | | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பாரக்கப்பட்டது | அடையப்பட்டது | | | |
| நீர் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பின் அபிவிருத்தி | (அ) வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | | | செயற்திட்ட கிரயம் அதிகரிக்கும் சாத்தியம் | 2019 திசெம்பர் 31 வரை காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | 2019 மே அளவில் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | - கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி | 100 | 75 | | | |
| | - பிரதான இறைக்கும் இல்லங்கள் | 100 | 53 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - சேறு உலர்த்தல் படுக்கை | 05 எண். படுக்கை | 03 எண். படுக்கை | | | |
| (ஆ) வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | | | | | |
| - உட்பகுதி கழிவு வலையமைப்பு- - திறந்த வெளி | 6.23 கிமீ | 2.30 கிமீ | செயற்திட்ட காலப்பகுதியின் போது வேலைகளை பூர்த்தியாக்குவதில் தாமதத்திற்கான சாத்தியம் | 2019 யூலை 31 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | |
| -அகழி | 2.87 கிமீ | 1.28 கிமீ | | | - மேற்படி- |
| - கிளைக் கழிவு வலையமைப்பு- - திறந்த வெளி | 71.1 கிமீ | 51.58 கிமீ | | | |
| அகழி | 5.7 கிமீ | 0..69 மீ | | | |
| - பிரதான பயைணி- திறந்த வெளி | 3.18 கிமீ | 1.26 கிமீ | | | |
| அகழி | 173 மீ | 17 மீ | | | |
| - வீட்டுக் கழிவு வலையமைப்பு- திறந்த வெளி | 135.கிமீ | 93.2 கிமீ | | | |
| -அகழி | 11.24 கிமீ | - | | | |
| -சாக்கடை வாயில் | 2,787 | 2,006 | | | |
| -சாக்கடை இறைக்கும் நிலையம் | 9 | 5 | | | |
| சேவைக் குழி | 4,867 | 4,060 | | | |
| அக்கறையுடையோர் அமர்வு | 9,779 | 6,943 | | | |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | -------------------------------------- | -------------------- | --------------------------------------- | ----------------------------------- |
| (அ) | குறைந்த வருமான தொகுதிக்காக சுகாதார வசதிகள் வழங்குதல் மீதான ஒப்பந்தம் 2018 மார்ச் 21 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் குறைபாட்டு தகுதிக் காலப்பகுதி 2019 மார்ச் 21 இல் முடிவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகார் 2019 ஆகஸ்ட் 30 வரையும் செயற்திட்டத்தால் சுட்டிக்காட்ப்பட்ட வேலைகளை திருத்துவதற்காக கவனத்திற்கு கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடையப்பட்டிருக்காத வீடுரிமையாளர்களிற்கு எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் நிலைபேறானதாக நிர்மாண வெலைகளாக ஐயத்தற்கிடமாக உள்ளது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரர்கள் வேலைகளை உடனடியாக பூர்த்தியாக்குவதற்கு அறிவுறுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டமானது குறைந்த வருமானத் தொகுதியினருக்கு சுகாதார வசதிகளை வழங்குவதற்கு ரூபா 152 மில்லியன் தொகை ஒதுக்கியிரந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது அந்த நோக்கத்திற்காக ரூபா 60.76 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. | செயற்திட்டத்தின் குறித்த நன்மைகள் பின்தள்ளப்பட்ட தொகுதியினரால் பெறப்பட முடியாதிருந்தது. | ரூபா 101 மில்லியனில் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் வேலைகள் செயற்பாட்டில் இருந்தது. | ஒப்பந்தத்தின் கீழான வெலைகளை பூர்த்தியாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஒப்பந்த ஆவணங்களின் பிரகாரம், ரூபா 30 மில்லியன் அல்லது அதற்கு மோலான பெறுமதியான இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களை மதிப்பாய்வு நொக்கத்திற்காக கருத்திற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 30 மில்லியன் அல்லது அதற்கு கீழான இடைக்கால கொடுப்பனவு சான்றிதழின் மதிப்பாய்வு மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | மதிப்பாய்வு மீதான காலம் மற்றும் தேவையில்லாமல் அதிகரிக்கும். | 2018 ஏப்ரல் 06 இல் எடுக்கப்பட்ட அமுலாக்கல் முகவரின் தீர்மானத்தின் பிரகாரம், அமுலாக்கப்பட வேண்டியிருந்தது. | மேலதிக நிதி நன்மைகளிற்காக ஒப்பந்தகாரர்களிற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதுடன் குறைக்க வேண்டியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | செயற்திட்டமானது உரிய காணிகளின் முறையான சட்ட உரிமைகளைப் பெற்றுக்கொள்ளாமல் போவல்ல, தெய்யன்னேவெல மற்றும் அசோகா வைத்தியசாலை மற்றும் மஹாநாம ஆரம்ப பாடசாலை என்பவற்றின் இடங்களில் இறைக்கும் இல்லங்களின் நிர்மாணம் தொடங்கியிருந்தது. | காணி உரிமையாளர் மற்றும் அமுலாக்கல் முகவர் என்போருக்கு இடையில் தகராறு எழும் சாத்தியம். | செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கலில் தாமதங்களை தவிர்ப்பதற்கு நிர்மாண வெலைகள் தொடங்கப்பட்டிருந்தது. | சட்ட உரிமைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முரணான நடவடிக்கைகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | -------------------------------------- | -------------------- | --------------------------------------- | ----------------------------------- |
| (அ) | ஜ.ஜென் 5.5 மில்லியன் கிரயம் மற்றும் அவற்றின் மீது ரூபா 32.41 மில்லியன் தொகையான உள்நாட்டு மற்றும் தாமதக் கட்டணங்கள் என்பவற்றில் 2018 மே 18 இல் செயற்திட்டத்தால் மோட்டார் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மோட்டார் வாகம் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | நிதி ஒதுக்கீடுகளின் தவறான பயன்படுத்தல் | கருத்துரைகள் வழங்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் உள்ளபடியான தேவைகள் கொள்வனவிற்கான தேவைகளை செய்வதற்கு முன்னர் இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | உரிய காலத்தில் வரிவிலக்கிற்கான வேண்டுகை செய்யப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் பொது செயற்திட்டத்தால் 18 வாகனங்களின் இறக்குமதிகள் மீது ரூபா 67.22 மில்லியன் தொகையான உள்நாட்டு வரிகள் செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 02 மாதங்களிற்கு மேலாக துறைமுகத்திலிருந்து மோட்டார் வாகனங்களை விடுவிப்பதிலுள்ள தாமதம் காரணமாக ரூபா 16.81 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்களும் செயற்திட்டததால் செலுத்தப்பட்டிருந்தது. | தாமதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் மேலதிக கிரயம் ஏற்பட்டது. | 2018 இல் நிதி ஒதுக்கீட்டு குறைவு காரணமாக தாமதக் கட்டணங்கள் செலுத்த வேண்டியிருந்தது. | நிதிகளின் வினத்திறனான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையை கண்காணிப்பதற்கு உரிய அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நிறைவெற்றல் முகவர் 2016 யூன் 10 ஆந்திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்தவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளரை செர்ப்பதற்கும் ஈடுபடுத்துவதற்கும் அல்லது நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்ப சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு ஊடாக கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வு செய்வாற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாடு நலிவாக உள்ளது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்ப சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் உள்ளக கணக்காய்வு வேலைகள் அமுலாக்கப்பட்டன. | உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 756 இல் வெண்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்தக்களின் முகாமைத்தவக் கட்டுப்பாடு நலிவாக உள்ளது. | பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்திட்டமானது இருக்கின்ற நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். |